# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# O.S.No.60/2021

2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ஆம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியமாகிய XW.1 **வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.K. அனிதா, கிரேடு 1 பென்ஞ்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காயத்ரி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை</u>:

நான் தற்போது பெரம்பலூர் ஸ்டேட் பேங்க் ஆப் கிளையில் துணை கிளை மேலாளராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ள சரவணகுமார் என்பவரின் 01.01.2008 முதல் 08.12.2025 வரையுள்ள காலத்திற்கான சேமிப்பு கணக்கு பட்டியலை கொண்டுவந்துள்ளேன். அந்த கணக்கு பட்டியல் சா.சா.ஆ.1, 04.03.2021ம் தேதி மேற்படி கணக்கிற்கு A.பழனிவேல் என்வரின் சேமிப்பு கணக்கிலிருந்து ரூ.7,50,000/– வந்துள்ளது. 12.03.2021ல் மேற்படி தொகையானது சரவணகுமாரின் வங்கி கடன் கணக்கில் வங்கியால் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு அவருடைய வங்கி கடன் கணக்கானது முடிந்துள்ளது. அதன்பிறகு சொத்து சம்மந்தப்பட்ட அடமான பத்திரத்தை அவர்கள் வாங்கியிருப்பார்கள்.

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

வங்கி கடன் கணக்கு முடிந்துவிட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவருடைய சேமிப்பு கணக்கை வைத்து பார்க்கும்போது கடன் பாக்கி எதுவும் கிடையாது. முதல் விசாரணையில் சொன்ன வரவு செலவு ஏற்பட்ட காலத்தில் நான் பெரம்பலூர் கிளையில் பணிபுரியவில்லை.

அடமான கடன் கொடுத்த காலத்தில் யார் பணியில் இருந்தார்களோ அவர்களை விசாரித்தால்  தான் கடன் பற்றிய விவரங்கள் தெரியும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.